# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 03 செவ்வாய்க்கிழமை 17.06.2025 கதிர் 228




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## எந்தச் சூழ்ச்சியும் நடக்கவே இல்லை

### தோல்வியால் புலம்புவதை நிறுத்துங்கள் என்று சஜித் அணியினருக்கு கொழும்பு மேயர் பதிலடி



கொழும்பு, ஜுன் 17

"கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவில் எந்தச் சதியும் நடக்கவில்லை. தோல்விய டைந்த சஜித் அணியினர் பொய்களைக் கூறிப் 7➤

## அநுரவின் சூழ்ச்சியால் கொழும்பை இழந்தோம்

### இப்படிக் கூறுகின்றார் கயந்த எம்.பி.



கொழும்பு, ஜுன் 17

"தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சதியாலேயே கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி இழந்தது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். 7➤

# 'சைக்கிள்' கட்சி வசமானது பருத்தித்துறை நகர சபை!





### நகர பிதாவாக டக்ளஸ் போல் தெரிவு

பருத்தித்துறை, ஜுன் 17

பருத்தித்துறை நகர சபையின் புதிய நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தெரிவானார்.

பருத்தித்துறை நகர சபையின் நகர பிதா மற்றும் துணை நகர பிதா ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று காலை பருத்தித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது. 7➤

## பருத்தித்துறை பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றிய தமிழரசு

### தவிசாளராக யுகதீஸ் ஏகமனதாகத் தெரிவு



பருத்தித்துறை, ஜுன் 17

பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உதயகுமார் யுகதீஸ் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவானார்.

பருத்தித்துறை 7➤

## ஒரு வாக்கு வித்தியாசத்தில் கரவெட்டி சபை தமிழரசு வசம்

### தவிசாளராகச் சுரேந்திரன் தெரிவு

கரவெட்டி, ஜுன் 17

யாழ். வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் (கரவெட்டி) தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த குமாரசாமி சுரேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் இன்று பிற்பகல் 3 மணியளவில் தவிசாளர் 7➤



## வடக்கு மனிதப் புதைகுழிகள் குறித்து டக்ளஸிடமும் விசாரணை செய்யுங்கள்


### நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜுன் 17

யாழ். மண்டைதீவில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவும் உடந்தையாக இருந்துள்ளார் என நாடாளுமன்றில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், டக்ளஸிடமும் விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2010 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட 7➤




- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# நிலுவை சம்பளம் கோரி ஆர்ப்பாட்டம்







திருகோணமலை, ஜூன் 17

திருகோணமலை - புல் மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலர் திங்கட்கிழமை (16) அன்று நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும், வழங்கபடாத நிலுவை சம்பளத்தை கோரியும் நிறுவனத்தினுடைய வாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புல் மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் கடந்த வருடம் PL-1-2016 சம்பள அளவு திட்டத்தின் கீழ் அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் குறித்த ஊழியர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது தமக்கு ஒரு வருட காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை என்று தொடர்ச்சியாக தாம் ஏமாற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்து எவரும் உட்செல்லவோ, வெளியேறவோ முடியாதவாறு நிறுவனத்தின் வாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பகுதிக்கு வருகை தந்த புல்மோட்டை உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் 25ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்குமாறு கோரியதை அடுத்து ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டன.

தற்போது கடமையாற்றும் குறித்த ஊழியர்களில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 34 பேரும், யூலை மாதம் 46 பேரும் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததாகவும் இவர்களில் 34 பேருக்கு 3 மாதங்கள் சம்பளம் வழங்கப்படும் ஏனையவர்களுக்கு இதுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இந்த வருடம் மார்ச் மாதம் 7ஆம் திகதியில் நிலுவை சம்பளத்தை வழங்கக் கோரியும், நியமனத்தை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இருந்ததாகவும் இதன்போது நேர்முகத்தேர்வு வைப்பதாக தெரிவித்ததை அடுத்து ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்ததாகவும் எனினும் இதுவரை அது நடைபெறவில்லை என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இது தொடர்பாக நிர்வாகத்திடம் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் சம்பளம் வழங்கப்படாத நிலையில் புல்மோட்டை க்கு வருகை தந்த அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி அவர்களுடனான பேச்சுவார்த்தையின்போது பொது முகாமையாளர் பெப்ரவரி மாதம் சம்பளம் வழங்கப்படும் என கூறிச் சென்றார்.

இந்த நிலையில் இது தொடர்பாக நிர்வாகத்துடன் பேசியபோது நியமனத்தை நாள் சம்பள அடிப்படையில் மாற்றி நாளாந்த கூலி அடிப்படையில் வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரியப்படுத்த பட்டுள்ளதாகவும் அந்த அடிப்படையில் அதை எதிர்த்தும், சம்பளம் வழங்கக் கோரியும் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் தமக்கு சரியான தீர்வு கிடைக்க பெறும் வரையில் அதை தொடர இருப்பதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ)



# தென்.கி பல்கலைக்கழகத்தின் 8 வது மாநாடு







திருகோணமலை, ஜூன் 17

இந்தியாவின் தமிழ்நாடு சேலத்தில் உள்ள பெரியார் அரசு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் திணைக்களம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 8 வது சர்வதேச ஆய்வு மாநாடு, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ஏ.எம்.எம். முஸ்தபாவின் நெறிப்படுத்தலில் பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (16) அன்று இடம்பெற்றது.

“முன்னேற்றம் பெற்றுள்ள இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தொழில் முனைவோர் செயல்பாடுகள், கலாசாரம், புதுமை, ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலம் சமூக மாற்றமும் பொருளாதார மேம்பாடும்” **(Social Transformation and EconomicUpliftment through Entrepreneurship>Culture>Innovation>and Export Promotionin the Digital Era (ICEIEDE–2025))** எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற ஆய்வு மாநாட்டில் ஆரம்ப நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம். ஜ/னைடீன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஏற்பாட்டுக்குழுவின் செயலாளரும் இந்தியாவின் தமிழ்நாடு சேலத்திலுள்ள பெரியார் அரசு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் திணைக்களத்தின் பேராசிரியருமான கலாநிதி வி.ஆர் பழனிவேல் சிறப்பு உரையாற்றினார்.

இந்தியாவின் தமிழ்நாடு சேலம், காக்காபாளையம் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆசோசியேட் பேராசிரியர் கலாநிதி ஆர். ரமேஷ், ஆய்வரங்கு தொடர்பான அவதான உரையை ஆற்றினார்.

ஆய்வரங்கின் பிரதான உரையை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். ஹிலால் நிகழ்த்தினார்.

அத்துடன் நன்றியுரை பேராசிரியர் கலாநிதி சல்பியா உம்மாவால் நிகழ்த்தப்பட்டது. நிகழ்வில் பொன்னாடைகள் போர்த்தப்பட்டு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு இந்தியாவிலிருந்து கலாநிதி வி.ஆர் பழனிவேல், கலாநிதி டி. ஸ்ரீவித்யா, கலாநிதி எஸ். நந்தினி, சேலம் ஜிஹான் டிராவல்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் விஷ்ணு மனோஜ், வி.பி. கவுரந்த, பி. கவினா, கே.எஸ். சௌந்தர்யா, எல். மொனிஷா, கலாநிதி ஆர். ரமேஷ், கலாநிதி கே. மணிமேகலை, எஸ்.பி. ஸ்ரீவித்யா, என்.எஸ். பிரகாஷ், தி விஜயலட்சுமி பிரகாஷ் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்து கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில், தொழினுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் நிர்வாக உத்தியோகத்தர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்கள் மாணவர்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர். (ஐ)

## கிண்ணியா நகர சபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்

கிண்ணியா, ஜூன் 17

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவோடு ஐக்கிய மக்கள் சக்தி வசமானது கிண்ணியா நகர சபை.

கிண்ணியா நகர சபையின் கன்னி அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் தலைமை தாங்கும் அதிகாரியுமான ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இந்த அமர்வு நடைபெற்றது.

இதன்போது கிண்ணியா நகர சபையின் நகர பிதா தெரிவுக்காக இடம்பெற்ற பகிரங்க வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தவிசாளர் வேட்பாளர் எம். எம் மஹ்தி வெற்றி பெற்றார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட கிண்ணியா நகர சபையில் 9 வாக்குகளை எம்.எம். மஹ்தி பெற்றுக்கொண்டதோடு, தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நகர பிதாவுக்காகப் போட்டியிட்ட அஷ்ரப் இம்ரான் 2 வாக்குகளையும் பெற்றுக்கொண்டார்.

நகர பிதா தெரிவின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 4 உறுப்பினர்களும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஓர் உறுப்பினரும் எம்.எம். மஹ்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் நகர பிதா தெரிவின்போது நடுநிலைமை வகித்தனர்.

துணை நகர பிதாவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ். அப்துல் அசீஸ் போட்டியின்றி ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத கிண்ணியா நகர சபையின் ஆட்சி அதிகாரத்தை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவோடு, ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட கிண்ணியா நகர சபைக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன தலா 4 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 3 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், பெற்றுக்கொண்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் குறித்து கத்தோலிக்க தேவாலயம் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 17

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குறித்து கத்தோலிக்க தேவாலயம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

2019 ஏப்ரல் 21ஆம் தேதி ஈஸ்டர் ஞாயிறன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் தொடர்பான நீதிக்கான நடவடிக்கைகள் தற்போது அரசு மேற்கொண்டு வரும் போதிலும், இந்த செயல்முறை மெதுவாக நடைபெறுவதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் கவனிக்கப்பட வேண்டியது என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்துள்ள புதிய விசாரணைகள் திருப்திகரமானவை என்றாலும், “மொத்த செயல்முறை மெதுவாகவே” நடைபெறுவதாக கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

“கடந்த ஆறு ஆண்டுகளில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விசாரணைகள் முற்றிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகே, மீண்டும் விசாரணைகள் ஆரம்பித்தன. ஆனால், மெதுவாக நடைபெறுவது நல்லது அல்ல என அவர் குறிப்பிட்டுளார்.

எனவே, அரசு எந்தப் பகுதியில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்,” என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், தாக்குதல் தொடர்பான வழக்குகளில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பங்களிப்பு திருப்திகரமாக இல்லையெனவும், எனவே தனிச்சிறப்பு வழக்கறிஞர் அலுவலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு பாரிய சீர்திருத்தங்கள் தேவை

கொழும்பு, ஜூன் 17

இலங்கையில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு பாரிய சீர்திருத்தங்கள் தேவைப்படும் என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத் இதனை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வின் போது குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையின் மீட்புக்கான பாதை: கடன் மற்றும் நிர்வாகம்” என்ற தலைப்பில் நடைபெற்ற குறித்த மாநாட்டில் வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த செயல் திட்டத்தை செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது.

வெளிப்புறக் கடனைக் குறைக்க நிறைய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், உள்நாட்டுக் கடன் இன்னும் அதிகமாக உள்ளது. எனவே, அதனை குறைப்பதற்கு நல்ல நிதிக் கொள்கையை உறுதியாக செயல்படுத்துவது மிகவும் முக்கியமானது.

இன்று, துணிச்சலான சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கை மக்களின் அர்ப்பணிப்பு காரணமாக, பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதிலும், மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களைக் குறைப்பதிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் மருந்துகள் மீண்டும் கிடைக்கின்றன. பணவீக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி வருமானம் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது என கூறியுள்ளார்.

(ஐ)

# பீஹாரில் கூட்டணி கட்சிகளை எப்படி சமாளிக்க போகிறார் தேஜஸ்வி யாதவ்?



பீஹாரில் இந்தாண்டு இறுதியில் சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அதில் வெற்றி பெறுவது என்பது, ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவரும், சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான தேஜஸ்வி யாதவுக்கு அவ்வளவு எளிதாக இருக்காது.

தொகுதி பங்கீடு உள்ளிட்ட பல விவகாரங்களை மிகவும் உன்னிப்பாக கையாள வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டு உள்ளது.

பீஹாரில் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ., கூட்டணி ஆட்சி நடக்கிறது. இங்கு மொத்தமுள்ள 243 சட்டசபை தொகுதிகளுக்கு, வரும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் தேர்தல் நடக்கவுள்ளது.

தேர்தலில் வென்று ஆட்சியை தக்க வைக்கும் நோக்கில், பா.ஜ., தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பணியாற்றி வருகிறது.

இந்த கூட்டணியில், ஐக்கிய ஜனதா தளம், மத்திய அமைச்சர் சிராக் பஸ்வானின் லோக் ஜனசக்தி, மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சியின் ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

காங்., - ராஷ்ட்ரீய ஜனதா தளம் - கம்யூ., கட்சிகள் அடங்கிய எதிர்க்கட்சி கூட்டணி, பீஹாரில் 'மஹாகட்பந்தன்' கூட்டணி என்ற பெயரிலும், தேசிய அளவில் 'இண்டி' கூட்டணி என்ற பெயரிலும் செயல்படுகின்றன.

பார்லி., மழைக்காலக் கூட்டத்தொடர் முடிந்ததும், செப்டம்பரில் பீஹார் சட்டசபை தேர்தல் தேதியை தலைமை தேர்தல் கமிஷன் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கு இன்னும் ஐந்து மாதங்களே உள்ள நிலையில், பீஹாரில் தற்போதே தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் துவங்கி உள்ளது.

கடந்த 2020 சட்டசபை தேர்தலின் போது, தேஜஸ்வியின் தந்தையும், முன்னாள் முதல்வரும், ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவருமான லாலு பிரசாத் யாதவ், கால்நடை தீவன ஊழல் வழக்கில், ஜார்க்கண்டின் ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

எனினும் மனம் தளராத தேஜஸ்வி, தனி ஆளாக தேர்தல் பிரசாரத்தை கையாண்டார். மாநிலம் முழுதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இதன் பலனாக, 75 தொகுதிகளை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக ராஷ்ட்ரீய ஜனதா தளம் உருவானது.

எனினும், அதன் கூட்டணி கட்சியான காங்., 70 தொகுதிகளில் போட்டியிட்டு, 19ஐ மட்டுமே கைப்பற்றியதால், தேஜஸ்வியின் முதல்வர் கனவு தகர்ந்தது.

மொத்தம் 243 எம்.எல்.ஏ.,க்கள் உடைய பீஹார் சட்டசபையில், ஆளும் பா.ஜ., கூட்டணிக்கு, 125 மஹாகட்பந்தன் கூட்டணிக்கு 110 எம்.எல்.ஏ.,க்கள் உள்ளனர்.

கடந்த சட்டசபை தேர்தலில் முதல்வர் நாற்காலியை தவற விட்ட தேஜஸ்வி, இந்த முறை அதை கைப்பற்றும் நோக்கில் தீவிரமாக பணியாற்றி வருகிறார். இதற்காக, தே.ஜ., கூட்டணியில் இல்லாத கட்சிகளை ஒருங்கிணைத்து, வலிமையான மஹாகட்பந்தன் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், எதிர் வரும் சட்டசபை தேர்தலில், மொத்தமுள்ள 243 சட்டசபை தொகுதிகளில், 145 தொகுதிகளில் போட்டியிட தேஜஸ்வி யாதவ் முடிவு செய்துள்ளார். மீதமுள்ள 98 தொகுதிகளை, காங்., - இ.கம்யூ., - மார்க்.கம்யூ., - மார்க்., -லெனினிஸ்ட் விடுதலை - விகாஷ்ஷீல் இன்சான் கட்சி ஆகியவற்றுக்கு பகிர்ந்தளிக்க அவர் முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

விகாஷ்ஷீல் இன்சான் கட்சி தலைவர் முகேஷ் சாஹ்னிக்கு, மீனவர்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளது. மேலும், 6 சதவீத ஓட்டுகள் உள்ளன. 2020 தேர்தலில், தே.ஜ., கூட்டணியில் இருந்த முகேஷ் சாஹ்னி, தற்போது மஹாகட்பந்தன் கூட்டணியில் இடம் பெற்றுள்ளார்.

தன் கட்சிக்கு குறைந்தபட்சம் 60 இடங்களையும், துணை முதல்வர் பதவிக்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முகேஷ் சாஹ்னி எழுப்பியது, கூட்டணி கட்சி தலைவர்களை அதிர்ச்சி அடைய வைத்தது. இதே போல, தங்களது கட்சிக்கு 45 இடங்கள் ஒதுக்க வேண்டும் என, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் விடுதலை கட்சியும் கோரிக்கையை வைத்தது.

கடந்த சட்டசபை தேர்தலில், 19 தொகுதிகளில் போட்டியிட்ட அக்கட்சி, 12 இடங்களில் வென்றது. இதை கருதி, தற்போது அதிக தொகுதிகளை அக்கட்சி கேட்கிறது.

சிறிய கட்சிகளே இப்படி முரண்டு பிடிக்கும் போது, காங்., மட்டும் எப்படி அமைதியாக இருக்கும்? கடந்த முறை போல், இந்த முறையும் 70 தொகுதிகளில் களமிறங்க அக்கட்சி முடிவு செய்துள்ளது.

இந்த கோரிக்கைகளுக்கு எல்லாம் ஒப்புதல் அளிக்கக்கூடிய இடத்தில் தேஜஸ்வி உள்ளார். மஹாகட்பந்தன் கூட்டணியின் முதல்வர் வேட்பாளரான அவர், கூட்டணி கட்சிகளை சமாளிக்க என்ன செய்யப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

எப்படியும் இந்த தேர்தல், தேஜஸ்வி யாதவுக்கு எளிதாக இருக்கப் போவதில்லை என்பது மட்டும் நிதர்சனம். (ஐ)



# விமான விபத்து குறித்து ரஜினிகாந்த் வேதனை

*''ரொம்ப வருத்தமான விஷயம். ஆண்டவன் அருளால் இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடக்கக்கூடாதுனு வேண்டிக்குறேன்'' என ஆமதாபாத் விமான விபத்து குறித்து நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்தார்.*

*குஜராத்தின், ஆமதாபாத் ஏர் இந்தியா விமான விபத்தில் அடையாளம் காண முடியாத அளவுக்கு உடல் கருகியும், சிதைந்தும்உயிரிழந்தவர்களை அடையாளம்காண்பதற்காக, டி.என்.ஏ., எனப்படும் மரபணு மாதிரி எடுக்கப்பட்டது.*

*விமானத்தில் இருந்தவர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி விடுதியில் இருந்தவர்கள் என, 250 பேரின் உறவினர்களிடம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இதில், 99 பேரின் உடல்கள் தற்போது வரை அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில், 64 உடல்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ன.*

*இந்நிலையில், இன்று (ஜூன் 17) சென்னை விமான நிலையத்தில் நிருபர்கள் சந்திப்பில் நடிகர் ரஜினி கூறியதாவது: ஆமதாபாத்தில் ஏர் இந்தியா விமான விபத்து ரொம்ப வருத்தப்பட வேண்டிய விஷயம். ரொம்ப மிக மிக வருத்தமாக இருக்கிறது. ஆண்டவன் அருளால் இனி அப்படி நடக்கக் கூடாதுனு வேண்டிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)*

# கர்நாடகாவில் அசோகர் கல்வெட்டு கண்டெடுப்பு



நாட்டின் பெரும் பகுதியை ஆண்டு, பேரரசர் என புகழப்பட்ட அசோகரின் உருவம் பொறித்த கல்வெட்டு, கர்நாடகாவின் கனகனஹள்ளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பீஹார் மாநிலத்தின் பாடலிபுத்திரம் என்ற பாட்னாவை தலைநகராக கொண்டு, பொ.ஆ.மு., 3ம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவர் மவுரிய மன்னர் அசோகர். இவர் பெரும் போர்களின் வாயிலாக, தற்போதைய ஆப்கானிஸ்தான், வங்கதேசம், இந்தியாவின் கர்நாடகா வரை தன் ஆட்சியை விரிவுபடுத்தினார்.

கலிங்கத்துப் போரின் போது உயிரிழந்தவர்களை கண்டு, புத்த மதத்துக்கு மாறி, போரிடுவதை நிறுத்தி, தன் மகன் மகேந்திரன், மகள் சங்கமித்திரை ஆகியோருடன், ஆசியா முழுதும் பல்வேறு நாட்டு அரசர்களை புத்த மதத்தை பின்பற்றும்படி வலியுறுத்தியதுடன், புத்த மத கோட்பாடுகளையும் வெளிப்படுத்தினார்.

மேலும், நாடு முழுதும் புத்த ஸ்துாபிகளையும் உருவாக்கினார்.

அசோகர் காலத்தில், தமிழகத்தில் சங்ககால மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் வலிமையுடன் ஆண்டு வந்தனர். அப்போது இங்கு, சமண சமயம் தழைத்தோங்கி இருந்தது.

அதனால், தமிழகத்தை தவிர மற்ற இடங்களை ஆண்டதாக, தன் கல்வெட்டில் குறிப்பிட்டு உள்ளார்.

அதாவது, குஜராத் மாநிலம் கத்தியவாரில் உள்ள கிர்னார் இரண்டாம் பெரும்பாறை கல்வெட்டில், தேவனுக்கு பிரியமானவரான கவுதமரின் கோட்பாட்டின்படி, தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில், விலங்குகள், மனிதர்களுக்கான மருத்துவ சாலைகளை அமைக்கவும், மருத்துவ மூலிகைகளை வளர்க்கவும் உத்தரவிட்ட செய்தி உள்ளது.

அதில், சேர, சோழ, பாண்டிய, சத்யபுத்ர எனும் பிறர் ஆண்ட நாடுகளிலும், புத்த மத கோட்பாடுகளை பரப்ப நடவடிக்கை எடுத்ததாக கூறப்பட்டுள்ளது.

இதில், சத்யபுத்ர என்பவர்கள், தமிழகத்தின் சிறந்த வீரர்களாகவும், வள்ளல்களாகவும் இருந்த சிற்றரசர்களான அதியமான் பரம்பரையை குறிக்கும்.

அந்த வகையில், கர்நாடக மாநிலத்தில், பொ.ஆ.மு., இரண்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சாதவாகனர்கள், கனகனஹள்ளி என்ற இடத்தில், ஸ்துாபியை ஏற்படுத்தியுள்ளனர்.

அதில், பல கல்வெட்டுகள், மத்திய தொல்லியல் துறையால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், தற்போதைய கள ஆய்வில், அசோகர் உருவம் பொறித்த கல்வெட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மத்திய தொல்லியல் துறையின் மைசூரு கல்வெட்டு பிரிவு இயக்குநர் முனிரத்தினம் கூறியதாவது:

கனகனஹள்ளியில்உள்ள கல்வெட்டுகளை ஆய்வு செய்ததில், ஒரு கல்வெட்டில், தன் பணிப்பெண்கள் சூழ, வலதுபுறம் தன் மகள் சங்கமித்திரையுடன் அசோகர், குடையின் கீழ் நிற்பது போல் உள்ளது. அதன்கீழ் பிராகிருத மொழியில், 'ராயி அசோகா' என பொறிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மற்றொரு கல்வெட்டில், போதி மரத்தையும், புத்த பாதத்தையும், தன் குருவின் வழிகாட்டுதலுடன் வணங்குவது போன்ற சிற்பம் உள்ளது. அதன் கீழும், 'ராயி அசோகா' என, பிராகிருதத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முழு வாழ்க்கையும் வெற்றி கொள்ளவே!

" நான் என்னும் பேரதிசயம்"-

புத்தகத்தின் தலைப்பே கொண்டாட்டத்தில் தொடங்குவதால் குதூகலமாக வாசிக்க மனம் ஈடுபட்டது. அட்டைப் படமும் மனதைக் கவர்ந்தது. நேர்மறையான எண்ணங்களே நம்மை எப்போதும் மகிழ்வுடன் வைக்கும் என்பது பெரும்பாலோர் அறிந்ததே. வாழ்க்கையின் பல சூழல்கள் பெரும்பாலும் நம்மை நேர்மறையாகச் சிந்திக்க வைப்பதில்லை. பேரிடர் காலத்திலும் நோய் தாக்கத்திலும் இத்தகைய சூழல் அனைவரையும் இவ்வாறு சிந்திக்க வைப்பதில்லை.

ஆனால், இந்தப் புத்தகத்தில் ஆரம்பக் கட்டுரையின் தலைப்பே 'இழப்பதற்கு என்ன இருக்கிறது?' என்று தொடங்குகிறது. இயல்பாக மனம் சோர்வடைந்து விரக்தி அடையும் நேரத்தில் கிடைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் கொண்டாடி தீர்ப்பது எவ்வளவு மன நிறைவு தரும் என்று விளக்கியுள்ளது. 'இழப்பதற்கு ஒன்றுமில்லை ஆனால், வெற்றி கொள்ள ஒரு முழு வாழ்க்கையே இருக்கிறது கொண்டாடலாம் வாங்க' என்று ஒவ்வொரு கட்டுரையிலிருந்தும் அடுத்த கட்டுரையை வாசிக்க குதூகலத்துடனே அழைத்துச் செல்கிறார் ஜான் ஷஹி.

இந்தப் புத்தகத்தில் உள்ள 23 கட்டுரைகளுமே நம்மை நாம் நேசிக்க, நம் வாழ்வை நாம் கொண்டாட, மனதில் மகிழ்ச்சியைத் தரக்கூடிய அளவில் இயல்பாக அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளக்கூடிய மனக்கலக்கத்தைத் தெளிவுபடுத்தி, வாழ்வை வெற்றிகொள்ளக்கூடிய வகையில் கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் தொடங்கி இளைஞர்கள், பெண்கள், உறவுகள், அலுவலக நண்பர்கள், முதியவர்கள் என அனைவருக்கும் ஏற்ற வகையில் அவரவர் கோணத்தில் பிரச்னைகளைக் கையாள்வது, நம்மை நாம் நேசிப்பது, வாழ்க்கையைக் கொண்டாடுவது என மிக அருமையான எடுத்துக்காட்டுகள் மூலமும் அனுபவத்தின் மூலமும் விளக்கியுள்ளது மிகச் சிறப்பு.


வாழ்க்கையே போராட்டம் என்று நினைத்து, தினம் தினம் துன்பங்களையும் துயரங்களையும் நினைத்து, தன் வாழ்க்கையை வாழாமல் இருப்பவர்களுக்கு இந்தப் புத்தகம் நல்ல தெளிவைத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை.

குறைபாடு அற்றது என்ற ஒன்று கிடையாது. கோடை இருப்பதாலேயே வசந்தத்தின் மகத்துவம் புரிகிறது. சவால்களில் இருந்து நீங்கள் கற்றுக்கொண்டு உங்கள் எதிர்கால சவால்களுக்குத் தயார்படுத்திக் கொள்ளலாம் போன்ற பல வார்த்தைகள் சிந்திக்கவும் வாழ்வைக் கொண்டாடவும் தோன்றுகிறது.

'கற்பதும் மறப்பதும் அவசியம்' என்ற கட்டுரையில் நாம் கற்றுக்கொண்ட விஷயங்கள் எதுவாக இருந்தாலும் அவை எப்போது நம் வளர்ச்சிக்குத் துணை நிற்கவில்லையோ நமது வாழ்வில் மகிழ்ச்சியைத் தரவில்லையோ அப்போதே அதை அழித்து விடவும் புதிதாகக் கற்றுக்கொள்ளவும் நம்மை திறந்த மனதுடன் வைத்துக்கொண்டு என்றென்றும் வாழ்வை கொண்டாடலாம் என்று சொன்ன விதம் எளிமையாகவும் புதுமையாகவும் ஏற்றுக்கொள்வதாகவும் உள்ளது.

'எப்போதும் நேர்மறையாக இருக்க வேண்டும்' என்கிற கட்டுரையில் பல எடுத்துக்காட்டுகள் மூலம் நேர்மறை எண்ணங்களை விதைத்துள்ளார்.

நல்ல பண்பட்ட நிலத்தில் செடிகள் செழிப்பாக வளரும். அதுபோல நம் மனதில் நேர்மறையான எண்ணங்கள் கொண்டாலே வாழ்வைக் கொண்டாடலாம் என்று நிறைவு செய்கிறார் ஆசிரியர்.








# இரண்டரை நாட்களில் அணுகுண்டு தயார்



ஈரான் வைத்திருக்கும் யுரேனியம் இருப்பு அடிப்படையில், அந்த நாடு இரண்டரை நாட்களில் அணுகுண்டு தயார் செய்துவிட முடியும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஈரான் அணுகுண்டு தயாரிக்கும் நிலையில் இருப்பதாக கூறி, அந்த நாட்டின் மீது இஸ்ரேல் போர் தொடுத்துள்ளது. தங்கள் நாட்டை பரம எதிரியாக கருதும் ஈரான், அணுகுண்டு தயாரித்து விட்டால், அது தங்களுக்கு பேராபத்தாக முடிந்துவிடும் என்ற எண்ணத்தில் இந்த தாக்குதலை இஸ்ரேல் நடத்துகிறது. பதிலுக்கு ஈரானும், இஸ்ரேல் மீது ஏவுகணை வீசி தாக்குதலில் நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஈரானிடம் இருக்கும் யுரேனியம், எத்தனை நாட்களில் அந்த நாடு அணுகுண்டு தயார் செய்துவிட முடியும் என்பது பற்றிய தகவல்கள் வெளியாகி உள்ளன. ஈரானின் அணுசக்தி திட்டத்தை தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வரும் சர்வதேச அணுசக்தி முகமை ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஈரான் இடம் தற்போதுள்ள மேம்படுத்தப்பட்ட யுரேனியத்தை கொண்டு இரண்டரை நாட்களில் ஒரு அணுகுண்டு தயார் செய்துவிட முடியும். 11 நாட்களில் ஐந்து அணுகுண்டுகளை தயாரித்து விடலாம். ஒரு மாத கால அவகாசத்தில் 11 அணுகுண்டுகளை ஈரான் தயார் செய்து விட முடியும். மூன்று மாத காலத்தில் 19 அணுகுண்டுகளையும், ஐந்து மாத காலத்தில் 22 அணுகுண்டுகளையும் அந்த நாடு தயார் செய்து விட முடியும்.

அந்த அளவுக்கு அந்த நாட்டிடம் தொழில் நுட்பமும், மேம்படுத்தப்பட்ட யுரேனியமும் இருப்பில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இது பற்றி உறுதியான தகவல்கள் கிடைத்த நிலையில் தான் இஸ்ரேல் தாக்குதலை துவங்கி உள்ளது. எனினும், ஈரான் ஒருமுறை கூட தான் அணு ஆயுதம் தயாரிக்கும் நோக்கத்துடன் யுரேனியம் மேம்படுத்துவதாக தெரிவிக்கவில்லை.

அமைதி நோக்கத்துக்காகவே யுரேனியத்தை மேம்படுத்துவதாக ஈரான் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெஹ்ரானில் இருந்து அனைவரும் உடனடியாக வெளியேறுங்கள் டிரம்ப் எச்சரிக்கை



டெஹ்ரானில் இருந்து அனைவரும் வெளியேறுங்கள் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரான், இஸ்ரேல் நாடுகள் இடையேயான மோதல் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. கடந்த 4 நாட்களில் மட்டும் கிட்டத்தட்ட 370க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஈரான் ஏவ, தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளது.

இஸ்ரேலின் டெல் அவிவில் உள்ள அமெரிக்க துணை தூதரக கட்டடம் ஈரான் தாக்குதலில் சேதம் அடைந்தது. இருநாடுகளின் ராணுவமும் அதிரடி தாக்குதல்களை இரவிலும் அரங்கேற்றி வருவதால் யுத்தம் முடிவுக்கு வருவது போல் தெரியவில்லை.

இந்நிலையில், டெஹ்ரானில் இருந்து அனைவரும் வெளியேறுங்கள் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவுறுத்தி உள்ளார். இது குறித்து அவர் தமது வலைதள பக்கத்தில் பதிவிட்டு இருப்பதாவது

வெறித்தனமாக தாக்க போவதாக இஸ்ரேல் மிரட்டல் பதில் தாக்குதலை தீவிரப்படுத்தியது ஈரான்

உடனடியாக டெஹ்ரானில் இருந்து அனைவரும் வெளியேறுங்கள். நான் கையெழுத்திடச் சொன்ன அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்காவுடன் ஈரான் கையெழுத்திட்டு இருக்க வேண்டும்.

மனித உயிர்களை இழப்பது என்ன ஒரு அவமானம். மிகவும் இலகுவாக சொல்ல வேண்டுமானால் ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது.

அதை தான் நான் மீண்டும், மீண்டும் சொன்னேன். அனைவரும் உடனடியாக டெஹ்ரானை விட்டு உடனடியரக வெளியேறுங்கள். இவ்வாறு டிரம்ப் கூறி உள்ளார். டெஹ்ரானில் இருந்து அனைவரும் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேலிய துருப்புகள் வெளியிட்ட அறிவிப்பை தொடர்ந்து டிரம்ப் இப்படி கூறி இருக்கிறார்.

இதற்கு முன்னதாக இத்தகைய நடவடிக்கைகளில் டிரம்ப் ஈடுபடாமல் இருந்தார்.

குறிப்பாக டெஹ்ரானை குறிவைத்து இஸ்ரேல் தமது தாக்குதல்களை வேகப்படுத்தி இருக்கும் தருணத்தில் அவரின் இந்த அறிவிப்பு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. (ஐ)

# நாங்கள் வெற்றிப் பாதையில் இருக்கிறோம்: சொல்கிறார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



நாங்கள் வெற்றிப் பாதையில் இருக்கிறோம், இது அடையப்பட்டு வருகிறது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தி சேனலுக்கு பெஞ்சமின் நெதன்யாகு அளித்த பேட்டி: ஈரான் அணுசக்தி மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணை அச்சுறுத்தல்களை அழிக்கும் இலக்குகளை அடைவதற்கான பாதையில் இஸ்ரேல் செயல்பட்டு வருகிறது. ஈரானில் இருந்து இரவு நேரத்தில் ஏவப்பட்ட 120க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் ராணுவம் அழித்தது. விமானப்படை தெஹ்ரானின் வான்வெளியைக் கட்டுப்படுத்துகிறது.

நாங்கள் வெற்றிப் பாதையில் இருக்கிறோம், இது அடையப்பட்டு வருகிறது. எங்கள் வீரமிக்க விமானிகள் மற்றும் எங்கள் அற்புதமான தரைப்படை குழுவினருக்கு நன்றி, அவர்களும் அற்புதமான பணிகளைச் செய்கிறார்கள். இஸ்ரேல் பொதுமக்களை தாக்கும் ஈரானைப் போலல்லாமல், இஸ்ரேல் ஈரான் ஆட்சியின் இலக்குகளை மட்டுமே தாக்குகிறது.

தெஹ்ரான் மீது வானத்தை நாம் கட்டுப்படுத்தும்போது, நமது குடிமக்களை குறி வைத்து குழந்தைகள் மற்றும் பெண்களை ஈரான் கொல்ல முயற்சிக்கிறது. ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா காமெனியைக் கொல்வது இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும். இஸ்ரேலின் தொடர்ச்சியான ராணுவ நடவடிக்கைகள் மோதலை அதிகரிப்பதற்குப் பதிலாக, முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# வெறித்தனமாக தாக்க போவதாக இஸ்ரேல் மிரட்டல் பதில் தாக்குதலை தீவிரப்படுத்தியது

மேற்காசியாவில் இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையேயான தாக்குதல், நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இஸ்ரேலுக்குள், நூற்றுக்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஈரான் செலுத்தியது. இதற்கு பதிலடியாக, ஈரானுக்குள் தீவிர தாக்குதல்கள் நடத்தப் போவதாகவும், டெஹ்ரானில் இருந்து மக்கள் வெளியேறும்படியும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இஸ்ரேல் - ஈரான் இடையே நீண்ட காலமாக மோதல்கள் உள்ளன. பல காலகட்டங்களில் இரு நாடுகளும் பல முறை நேரிடையாக தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், காசாவை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு இஸ்ரேல் மீது, 2023 அக்டோபரில் தாக்குதல் நடத்தியது.

ஹமாஸ் தவிர, ஹவுதி, ஹிஸ்பொல்லா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு ஈரான் ஆதரவு அளித்து, தூண்டி விட்டு வந்துள்ளது. இதனால், இஸ்ரேல் - ஈரான் இடையேயான விரோதம் மேலும் மோசமடைந்தது. இதைத் தவிர, அணு ஆயுதத் தயாரிப்புக்கு ஈரான் தயாராவது, தனக்கு விடப்பட்டுள்ள நேரடி எச்சரிக்கை என்று இஸ்ரேல் கூறி வருகிறது. அணுசக்தி தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே சமீபத்தில் நடந்த பேச்சு தோல்வி அடைந்தது. இதைத் தொடர்ந்து, கடந்த 13ல் ஈரானில் மிகப் பெரிய தாக்குதலை இஸ்ரேல் நடத்தியது.

இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்தது. இரு நாடுகளும் பரஸ்பரம், ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் வாயிலாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே, 1,500 கி.மீ., துூர இடைவெளியும், நடுவில் சில நாடுகளும் உள்ள போதிலும், இந்த தாக்குதல்கள் தீவிரமடைந்தன. ஈரானின் அணுசக்தி வளாகங்களையும், அணுசக்தி செறிவூட்டும் மையங்களையும் குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்நிலையில், நான்காவது நாளாக நேற்றும் இரு தரப்பும் பரஸ்பரம் தாக்குதல்களை தீவிரப்படுத்தின. ஈரான், 100க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், ட்ரோன்களை அனுப்பியது. இதில், எட்டு பேர் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரானுக்குள் இஸ்ரேலும் ஏவுகணை, ட்ரோன் தாக்குதலை நடத்தியது. ஈரான் அனுப்பிய, 120 ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது. இதைத் தொடர்ந்து, ஈரானின் வான்தடுப்பு வசதிகளை முழுமையாக சேதப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. அதனால், ஈரானுக்குள் நுழைந்து வான்வழி தாக்குதலை தீவிரப்படுத்தப் போவதாக கூறியுள்ளது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள பெரும்பாலான மக்களை பாதுகாப்பாக வெளியேறும்படியும், இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுவரை நடந்துள்ள தாக்குதல்களில், 224 பேர் உயிரிழந்துள்ளதாக ஈரான் தரப்பு கூறுகிறது. ஆனால், 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக, நிவாரண அமைப்புகள் கூறுகின்றன.

ஈரான் நடத்திய தாக்குதல்களில், 24 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 500 பேர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது. மேலும், 370 ஏவுகணைகள், 100க்கும் மேற்பட்ட ட்ரோன்களை அழித்துள்ளதாகவும், இஸ்ரேல் கூறுகிறது. (ஐ)

## அநுரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தியே கைப்பற்றியிருக்க வேண்டும். 60 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் ரிஸா சரூக்குக்கு ஆதரவு வழங்குவோம் என்று எழுத்து மூலம் உத்தரவாதம் தந்திருந்தனர்.

ஆனால், ஜேர்மனியிலிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடு திரும்பிய கையுடன் கொழும்பு மாநகர சபைக்குள் தலையிட்டு ஏற்படுத்திய சதியால் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஜனாதிபதியின் தலையீட்டினால்தான் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றியிருக்கும்.

இது எமக்குத் தோல்வி அல்ல. சதியால் 7 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

ஜனாதிபதியின் சதியால் கொழும்பு மாநகர சபையின் மேயராக வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விராய் கெலி பல்தசாருக்கு வாழ்த்துக்கள்.” - என்றார்.

## பருத்தித்துறை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று முற்பகல் 11.30 பருத்தித்துறை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

20 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 9 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு 2

ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவுக்கான அமர்வில், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட உதயகுமார் யுகதீஸ் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவானார்.

அதையடுத்து உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட கனகரத்தினம் ஸ்ரீகாந்தரூபனும் அந்தப் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவானார்.

## சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 5 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 4 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா

2 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு (அர்ச்சுனா அணி) ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

இன்றைய நகர பிதா தெரிவுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வின்சன் டீ போல் டக்ளஸ் போலுக்கு 7 பேரும் (சைக்கிள் 5, சங்கு 2), இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தி.சந்திரசேகரனுக்கு 4 பேரும் ஆதரவு வழங்கினர்.

வாக்கெடுப்பின்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வெளிநடப்பு செய்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் இரண்டு உறுப்பினர்கள் மற்றும் அர்ச்சுனா அணி சுயேச்சைக் குழுவின் ஓர் உறுப்பினர் ஆகியோர் நடுநிலை வகித்தனர்.

அதேவேளை, துணை நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த தேவராசேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

## ஒரு வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவுக்கான அமர்வு நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு 7 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 4 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 6 ஆசனங்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு 2 ஆசனங்களும் உள்ளடங்கலாக மொத்தம் 32 ஆசனங்களைக் கொண்ட வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் தெரிவு இரகசியமாகவா அல்லது பகிரங்கமாகவா நடத்தப்பட வேண்டும் என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனப் பெரும்பான்மை வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தவிசாளருக்காக குமாரசாமி சுரேந்திரனும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் தம்பையா சிவராசாவும் முன்மொழியப்பட்டனர்.

இலங்கைத்தமிழரசுக்கட்சி உறுப்பினர் கு.சுரேந்திரன் 13 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட த.சிவராசா 12 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் 6 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலை வகித்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஓர் உறுப்பினர் வாக்கெடுப்பில் பங்கேற்காது வெளிநடப்புச் செய்தார்.

அதையடுத்து வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ரி.தயாபரன் தெரிவு செய்யப்பட்டார்.

## எந்தச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புலம்புவதை நிறுத்த வேண்டும்.”

- இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராகத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள விராய் கெலி பல்தசார் தெரிவித்தார்.

‘தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சதியாலேயே கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி இழந்தது’ - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே கொழும்பு மாநகர சபையின் புதிய மேயர் விராய் கெலி பல்தசார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவு விவகாரத்தில் எமது கட்சியின் தலைவர் ஜனாதிபதியோ அல்லது எமது கட்சியின் உயர்பீடமோ தலையிடவில்லை. ஜனநாயக முறைப்படி வாக்கெடுப்பு நடைபெற்றது. 61 உறுப்பினர்கள் எனக்கு ஆணை வழங்கினார்கள்.

கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்ற சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் பல வழிகளில் வியூகங்களை வகுத்தனர். ஆனால், அவர்களின் வியூகம் இறுதியில் தோல்வியடைந்துவிட்டது.

தற்போது அவர்கள் பொய்களைக் கூறிப் புலம்பத் தொடங்கியுள்ளனர். மேயர் தெரிவில் எந்தச் சதியும் நடக்கவில்லை. தோல்வியால் புலம்புவதை அவர்கள் நிறுத்த வேண்டும்.

கொழும்பு மாநகரத்தின் செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.” - என்றார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யுத்தம் காரணமாக காணாமலாக்கப்பட்டவர்களும், படுகொலை செய்யப்பட்டவர்களும் மனித எலும்புக்கூடுகளாகவும், எச்சங்களாகவும் புதைகுழிகளிலிருந்து மீட்கப்படுவதை தாங்களும் அறிவீர்கள்.

அந்தவகையில் மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம், புனித தோமையார் ஆலயத்தின் அருகாமை, திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு குமுழமுனை, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளின் வரிசையில் தற்போது யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தி பகுதியிலிருந்தும் மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இவை முழுமையாக தமிழ்மக்களுடையவை தான் என்பது தெளிவாகிறது.

குறிப்பாக சிந்துப்பாத்தி மயானத்தை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மீட்கப்பட்ட கைக்குழந்தைகள், பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியரது என்புக்கூடுகள் எந்த ஆடைகளுமற்று அடித்து நொறுக்கி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களின் என்புக்கூடுகள் என்பதையே நீதித்துறையும், தடயவியல் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் மனிதப்புதைகுழிகள் மலிந்த இடமாகவே வடக்கு, கிழக்கு பகுதிகள் உள்ளன என்பதை அமைச்சர் அறிவாரா?.

தற்போது யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தி இந்து மயானத்திற்கு அருகில் தோண்டி எடுக்கப்படும் மனித என்புக்கூடுகள் தொடர்பில் பக்கச்சார்பில்லாத - நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப்படுமா?, இதற்கு முன்னர் நடைபெற்ற முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் நிறைவுபெற்றுவிட்டதா என்பதையும், அதுசார்ந்து நீதித்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை என்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

மண்டைதீவு செம்பாட்டுத்தோட்டம் தோமையார் தேவாலயப்பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியில், 1990களில் வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்து வரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களுமே புதைக்கப்பட்டார்கள் என வடக்கு, கிழக்கு மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன. இது சார்ந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அமைச்சர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

3ம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த திருமதி.ஆசைதாஸ் யேசுரட்ணம் தர்மராணி என்ற தாயார், தனது இரு பிள்ளைகள் உட்பட 84 பேர் மண்டைதீவில் காணாமலாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நீதியைப் பெற்றுத்தருமாறும் 2025.04.30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை எனக்கும் கிடைக்கச் செய்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விகளோடு காத்திருக்கும் இந்தத் தாய்மாருக்கு அமைச்சரின் பதில் என்ன என்று கேள்வி எழுப்பியதுடன், திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப்புதைகுழியின் அகழ்வு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதன் உண்மைநிலை எப்போது வெளிவரும் என்பதை அமைச்சர் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டும்

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மண்டைதீவு, அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளிலிருந்து இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எண்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பிலும், மண்டைதீவு செம்பாட்டுத் தோட்டம் புனித தோமையார் தேவாலய வளாகத்தில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழியுடன் தொடர்புடைய கொலைகள் பற்றியும், இலங்கை இராணுவத்தின் துணை ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை விசாரணை செய்ய வேண்டும்.” - என்றார்.

# முல்லைத்தீவில் கடற்படை முகாமுக்கான காணி சுவீகரிப்புக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

## அளவீட்டுப் பணி இடைநிறுத்தம்





முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவில் கடற்படை முகாமுக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை இன்று மக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டது.

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவில் சிலாவத்தை பகுதியில் மக்களுக்குச் சொந்தமானதாக அறிவிக்கப்பட்ட இரண்டு ஏக்கர் காணியில் கடற்படையினர் தளம் அமைத்துள்ளார்கள்.

இந்தக் காணி சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணிகளை இன்று மேற்கொள்ள அதிகாரிகள் சென்ற நிலையில் மக்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தமையால் காணி அளவீட்டுப் பணிகள் இடைநிறுத்திவைக்கப்பட்டன.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2025 வெளியிடப்பெற்றது.